# அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா




அன்னை கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் புனித அடக்கஸ்தலம் - புனித மக்கா

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் முதல் மனைவி ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) நாயகியாவார்கள். ‘உம்மு ஹிந்த்’ என்பது அன்னாரின் புனைப்பெயராகும்.

‘தாஹிரா’ (பரிசுத்தமானவர்) என்பது அவர்களின் சிறப்பு பெயர். அவர்களின் தகப்பன் ‘குவைலித்’ என்பவராவார். குஸையென்பவரால் ஹஸ்ரத் கதீஜாப் பிராட்டியாரின் வம்சம் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் வம்சத்தோடு கலக்கிறது. குவைலித் தனது கூட்டத்துக்குத் தலைவராயிருந்ததால் ‘அமீர்’ என அழைக்கப்பட்டு வந்தார். இவர் ஓர் பிரபல வியாபாரியும் சீமானுமாயிருந்தார். ‘பாத்திமா பின்த் ஜாயிதா’ என்பவரை ‘குவைலித்’ மக்கா நகர வந்து குடியேறிய பின்னரே மணந்தார். இந்த பாத்திமாவே அன்னை

ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா)வின் தாயாராவார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஆணையாண்டுக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தார்கள்.

முதலாவதாக ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) வுக்கு 'அபூஹாலாபின் நப்பாஷ் தமீமி' என்பவருடன் விவாகமாகி ஹாலா, ஹிந்த் எனும் இரு ஆண் பிள்ளைகள் கிடைத்தனர். அவர் இறந்த பின், அதீக் பின் ஆயித் மக்ஜூமி என்பவருடன் விவாகமாகியது. அவருக்கு ஹிந்த் என்னும் பெண் குழந்தை கிடைத்தது. இதுசமயம் நடந்த 'ஹர்புல் புஜ்ஜார்' எனும் யுத்தத்தில் குவைலித் கொல்லப்பட்டார். இவ்யுத்தம் யானை ஆண்டுக்கு இருபது வருடங்களுக்குப் பின் நிகழ்ந்தது. அதீகும் இறந்துவிட்டார்.

சீமாட்டியாயிருந்த போதிலும் கணவனும் தந்தையும் பிரிந்ததால் வியாபாரத்தை நடத்துவதற்காக ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு நம்பிக்கைக்குரிய ஒருவர் மிக அவசியமாக இருந்தது. அந்நேரம் மிக நம்பிக்கைக்குரியவர், (அல்அமீன்) என எல்லோராலும் அழைக்கப்பட்டு வந்தவரும், எல்லா நற்குணங்களுக்கும் பிரபல்யம் வாய்ந்தவருமான கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களேயாவார்கள். எனவே அன்னவர்களை வரவழைத்து, வியாபாரப் பொருட்களை ஸிரியாவுக்கு எடுத்துச் செல்லுமாறு வேண்டிக்கொண்டார்கள். இதில் பன்மடங்கு இலாபம் கிடைத்தது.

ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) வின் நற்குணம், நல்லொழுக்கம், பெருந்தன்மை, தாராள எண்ணம் ஆகியவையெல்லாம் குறைஷியரைக் கவர்ந்திருந்தன. ஆதலால்

அவர்களில் அநேகர், அன்னவர்களை மணம்புரிய முயற்சித்தனர். ஆனால் அவர்களில் எவரையேனும் ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் விரும்பவில்லை. கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களையே தான் திருமணம் செய்து கொள்ள வேண்டிய செய்தியை நபீஸா பின்த் முன்யா மூலம் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுக்கு தெரிவித்தார்கள். கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். ஐநூறு தங்கம் மஹர் கொடுக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. அப்பொழுது கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுக்கு வயது இருபத்தைந்து. ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) வின் வயதோ நாற்பது. இது கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் முதல் திருமணம். சுமார் 25 வருட காலமாக ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் வாழ்க்கைத் துணைவியாய் வாழ்ந்து வந்தார்கள். அத்தனைகாலம் வரை கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் வேறு திருமணம் செய்துகொள்ளவில்லை.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் ஒழுக்கம், பழக்கவழக்கங்கள், பகிரங்க, இரகசிய, அம்சங்களையெல்லாம் ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) வைக் காட்டிலும் வேறு யார் நன்கு உணர்ந்துகொள்ள முடியும்? இதனால் அன்றோ நபிபட்டம் பிரகடனப்படுத்தபட்டதும் ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களிடம்

அறிவித்தபோது, அதை அப்படியே ஏற்றுக்கொண்டு, தாங்கள் சத்திய புருஷர் தாம், அல்லாஹ்வின் தூதர் என்பதிலும் எனக்கு சந்தேகமில்லை' எனக்கூறி முதன் முதலில் ஈமான்கொண்டார்கள். ஹிராக்குகையில் நடந்த சம்பவத்தை ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) விடம் கூறி "எனக்குப் பயமாயிருக்கின்றது" என்று கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) கூறியதாவது: "தாங்கள் மனங்கலங்க வேண்டாம், இறைவன் உங்களைக் கைவிடமாட்டான், ஏனென்றால் தாங்கள் குடும்பத்தாரை ஆதரிக்கிறீர்கள், அநாதைகளையும், அகதிகளையும், ஏழைகளையும் நன்கு விசாரிக்கிறீர்கள். விருந்தோம்பலிலும் கஷ்ட சமயங்களிலும், மிகக் கூடிய நன்மை புரிகின்றீர்கள்" என்பதே. ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள், கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுக்குச் சகல விதத்திலும் உதவியாளராயிருந்தார்கள். குறைஷியரின் இன்னல்கள் உண்டானபோது கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுக்கு அடிக்கடி ஆறுதல் கூறி உதவிபுரிவார்கள். 'ஷிஃபு அபீதாலிப்' எனும் பள்ளத்தாக்கில் மூன்று வருடங்களாக கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களும், ஹாஷிம் வர்கத்தவரும், தடுக்கப்பட்டு அவதியுறும்போது ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அன்னவர்களும் அதில் பங்குபற்றினார்கள்.

ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் 25 ஆண்டுகள் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அன்னவர்களின் மனைவியாக வாழ்ந்து நபித்துவத்தின் 10 ஆம் ஆண்டு ரமழான் மாதம், 65 ஆம் வயதில் இறையடி சேர்ந்தார்கள். இவர்களினதும் அதேயாண்டில் அபூதாலிபினதும் மறைவு இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு ஓர் சோதனை காலமாய் ஆனது. இதனால் இவ்வாண்டுக்கு கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் 'ஆமுல் ஹுஜ்ன்' துக்க ஆண்டு எனப்பெயரிட்டார்கள். கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் மூலம் ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், நான்கு பெண் குழந்தைகளும் பிறந்தனர். இப்ராஹீமைத் தவிர ஏனையோர்கள் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் மூலம் ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு பிறந்தவர்கள்.

**ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் கூறினார்கள்.**
**"கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களின் மீது நான் ரோஷப்பட்டதைப் போல் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் வேறெந்த மனைவியின் மீதும் நான் ரோஷப்பட்டதில்லை. நான் அன்னவரைப் பார்த்ததில்லை. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள், அவரை அதிகமாக நினைவு கூர்ந்து (புகழ்ந்து பேசி) வந்தார்கள். அவர்கள் சில வேளைகளில் ஆட்டை அறுத்து அதைப் பல துண்டுகளாகப் பிரித்து, பிறகு அதை கதீஜாவின் தோழிகளிடையே (பங்கிட) அனுப்பி விடுவார்கள்.**

***(ஸஹீஹுல் புகாரி – 3818***




மேலும் பல இஸ்லாமிய பெரியார்களின் சரிதைகளை, எங்கள் இணையத்தளத்தில் வாசியுங்கள்:

www.mailofislam.com